
### தந்தை பெரியார் 148வது பிறந்த நாள்!

# கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின்

## இன்று காலை 8.30 மணிக்கு அண்ணா சாலை, சிம்சன் அருகே அமைந்துள்ள தந்தை பெரியார் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கிறார்!

### சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!



பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் 148வது பிறந்த நாளை முன்னிட்டு இன்று (17.9.2026) காலை 8.30 மணிக்கு அண்ணா சாலை, சிம்சன் அருகே உள்ள தந்தை பெரியார் சிலைக்கு கழகத் தலைவர் தளபதி **மு.க.ஸ்டாலின்**, பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் **டி.ஆர்.பாலு மற்றும் முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள்** உள்ளிட்ட கழக முன்னணியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள்.

கழக மாநில அமைச்சர் பெருமக்கள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை,இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி ஆகிய அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**நே.சிற்றரசு**
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

### த.வெ.க. ஆட்சியில் புதுக்கோட்டை அரிமளம்

# நெல் கொள்முதல் நிலையம் கொள்ளையர்களின் கூடாரமாகி விட்டது!

### விவசாயிகள் வேதனை! போராட்டம் நடத்த முடிவு!

புதுக்கோட்டை, செப்.17 –

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலுகா, அரிமளம் சுற்று வட்டார பகுதிகளில் வசிக்கும் விவசாய பெருங்குடி மக்கள் மிகுந்த மனவேதனைக்கு ஆளாகி இருந்த வேலையில் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையில் நல்லாட்சி அமைந்தது அப்போது அரிமழம் சுற்றுவட்டார பகுதிகளில் வசிக்கும் விவசாயிகள் கேரள மாநில திராவிட மு ன்னேற்றக் கழகத்தின் அமைப்பாளர் புதுக்கோட்டை கே.ஆர்.முருகேசன் அவர்கள் மூலமாக அன்றைய சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றனர்.

விவசாயிகள் படும் துயரத்தை கேரள மாநில அமைப்பாளர் புதுக்கோட்டை கே.ஆர்.முருகேசன் அமைச்சர் ரகுபதி அவர்களிடம் எடுத்துக் கூறி உடனடியாக நெல் கொள்முதல் நிலையம் திறக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அந்த நிமிடமே உத்தரவு பிறப்பித்து ஒரு வாரத்திற்குள் நெல் கொள்முதல் நிலையம் திறக்க ப்பட்டது. அரிமழம் சுற்றுவட்டார பகுதிகளில் வசிக்கும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இந்த நிலை கடந்த 5 ஆண்டுகள் நீடித்தது.இப்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நிலையில் நெல் கொள்முதல் நிலையம் கொள்ளையர்கள் கூடாரமாக மாறிவிட்டது.அதன் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

அரிமளம் சத்திரம் நெல் கொள்முதல் நிலையத்தில் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யும்போது, ஒரு மூட்டைக்கு 46 வீதம் பணம் வசூலிக்கப்படுவதாகவும், மேலும் எடை போடும் முறையிலும் நெல் சிதறல்/குறைவு தொடர்பாகவும் முறைகேடுகள் நடைபெறுவதாகவும் விவசாயிகள் தரப்பில் புகார் உள்ளது.

நெல் மூட்டைகளை 42 கிலோ அளவில் எடை இயந்திரத்தில் வைத்து எடை எடுத்த பின்னர், கப்பு அல்லது கையால் நெல்லை அள்ளி(சுமார் 2,3 கிலோ)கீழே போடுகின்றனர், அவ்வாறு கீழே சிந்தும் நெல்லை தனியாக சேகரித்து மீண்டும் ஒரு மூட்டையாக கணக்கிட்டு, விவசாயியின் நெல்லுடன் சேர்த்து லோடுமேன் மற்றும் அலுவலர்கள் பிரித்துக் கொள்கின்றனர்.

மேலும், சம்பந்தப்பட்ட DPC இணையதளத்தில் காணப்பட்ட கணக்கின்படி, இத்தடவை 23,140 மூட்டை நெல் விவசாயிகளிடமிருந்து பெறப்பட்டதாக பதிவாகியுள்ளது.

23,140 மூட்டைகளுக்கு ஒரு மூட்டைக்கு 46 என்ற அடிப்படையில்:

23,140 × 46 = 10,64,440

என மொத்தத் தொகை வருகிறது.

மேலும், ஒரு மூட்டைக்கு சுமார் 3.5 கிலோ நெல் இவ்வாறு சிதறல்/குறைவு ஏற்படுவதாகக் கணக்கிட்டால்:

23,140 × 3.5 கிலோ = 80,990 கிலோ கணக்கில் இல்லாமல் கொள்ளையடிக்கப்படுகிறது. ஒரு கிலோ நெல்லின் மதிப்பு 25 எனக் கணக்கிட்டால்:

80990 × 25 = 20,24,750.00

என்ற அளவிற்கு நெல் மதிப்பு வருகிறது.இந்த தொகை சம்பந்தப்பட்ட அமைச்சர் வரை செல்கிறது என்று கூறுகிறார்கள்.

மேற்கண்ட தொகைகள் மற்றும் நெல் அளவு தொடர்பாக உரிய பதிவுகள், DPC கணக்குகள், எடை இயந்திரப் பதிவுகள், கொள்முதல் பதிவுகள், விவசாயிகளிடம் வசூலிக்கப்பட்ட தொகைகள் மற்றும் சம்பந்தப்பட்ட பணியாளர்களின் கணக்குகள் ஆகியவற்றை அதிகாரிகள் முழுமையாக ஆய்வு செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

இந்த முறைகேட்டினால் பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு உரிய பணம்/நெல் மதிப்பு கிடைக்காமல் போகும் நிலை ஏற்படுகிறது. எனவே விவசாயிக ளின் நலனை கருத்தில் கொண்டு இந்தப் புகாரை உடனடியாக விசார ணைக்கு எடுத்துக் கொண்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் பணியாளர்களிடம் லஞ்ச ஒழிப்புத் துறை மற்றும் அமலாக்கத்துறை உரிய விசாரணை நடத்தி சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.என்று அரிமளம் சுற்றுவட்டார பகுதிகளில் வசிக்கும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1. அரிமளம் சத்திரம் நெல் கொள்முதல் நிலையத்தில் நடைபெற்ற கொள்முதல் தொடர்பான முழு கணக்கையும் அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும்.

2. DPC இணையதளத்தில் பதிவாகியுள்ள 23,140 மூட்டை கொள்முதல் விவரங்களை சரிபார்க்க வேண்டும்.

3.விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்பட்டதாக கூறப்படும் மூட்டை ஒன்றுக்கு 46 தொகை குறித்து முழுமையான விசாரணை நடத்த வேண்டும்.

4. எடை இயந்திரத்தின் அளவீடு, எடைப் பதிவுகள் மற்றும் கொள்முதல் பதிவுகளை சரிபார்க்க வேண்டும்.

5. எடை போட்ட பின்னர் கீழே சிந்தும்/அள்ளப்படும் நெல்லை தனியாக சேகரித்து கணக்கில் எடுத்துக்கொள்வது தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும்.

6. விவசாயிகளிடம் இருந்து சட்டவிரோதமாக அல்லது விதிமுறைக்கு புறம்பாக ஏதேனும் தொகை வசூலிக்கப்பட்டிருந்தால், அந்தத் தொகையை சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு திருப்பி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

7. முறைகேட்டின் காரணமாக விவசாயிகளுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை கணக்கிட்டு, உரிய இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

8. விசாரணை முடிவில் முறைகேடு உறுதி செய்யப்பட்டால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள்/பணியாளர்கள் மீது விதிமுறைகளின் படி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

9. இந்தப் புகார் தொடர்பாக லஞ்ச ஒழிப்புத் துறை மற்றும் அமலாக்கத்துறை ஆகிய அமைப்புகள் விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் மிகப் பெரிய அளவில் போராட்டம் நடைபெறும் என்று பொதுமக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பேராவூரணி மிசா மு. கிருட்டிணமூர்த்தி
### செப்டம்பர் 17 (2003)



கழகத்தின் ஆரம்ப கால அமைப்புகளில் வட்டச் செயலாளராக பணியாற்றியவர்.

சட்டமன்ற உறுப்பினராக சிறப்பாக பணியாற்றி மக்கள் மனதில் இடம் பிடித்தவர்.

மத்திய கூட்டுறவு வங்கியின் துணைத் தலைவராகவும், மாவட்ட துணைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

ஓராண்டு காலம் மிசா கைதியாகவும், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# பல்லக்கில் ஏறிவிட்ட பம்மாத்துப் பேர்வழி!

'ஊமலி ஒன்றைக் குளிப்பாட்டி
நடுவீட்டில் வைத்தாலும்.. அது
வாலைச் சுருட்டிக் கொண்டு
வாசலுக்குத்தான் போகும்' என்பது
அற்றைத் தமிழர்
அனுபவத்தில் பிறந்த
அமுதமொழி.
அது இன்றும் கூட
சரியாகத்தான் இருக்கிறது!

தகுதி என்பதன் ஒரு சிறு
பகுதி கூட இல்லாத
பகட்டு மனிதர் ஒருவருக்குப்
பதவி கிடைத்து விட்டது!

பட்டத்து யானையும்
பல்லக்கும் பரிவாரமும்
பட்டுக் குஞ்சமும் கிடைத்துவிட்டது
ஒரு
பம்மாத்துப் பேர்வழிக்கு!

அரிதாரம் பூசி
கொடுத்ததைப் பேசி
அட்டைக் கத்தியை
ஆணவமாய் வீசி..
அசிங்கம் ஆபாசம் ஆவேசம்
அதிகபட்ச வன்முறை என்று
ஆடிப் பாடி
ஆலிங்கனம் செய்த ஓர்
அற்ப ஜந்துவுக்கு..
அரசபீடம் கிடைத்துவிட்டது!

நிஜத்தின் சொரூபத்தை
நெல்முனை அளவுகூட
நிழற்படத்தில் காட்டாமல்..

நேர்மை என்பதை
நீர் முள்ளின் நுனியளவும்
நெஞ்சத்தில் சேர்க்காமல்..

படம்பார்க்கும் தலைமுறையைப்
பண்பாட்டுத் தளத்தில்
ஓர் அங்குலம் கூட
உயர்த்த நினைக்காமல்..

கள்ளத் தனத்தோடும்
கறுப்புப் பணத்தோடும்
குள்ள மனத்தோடும்
கூட்டாஞ் சோறாக்கும்
ஒரு
கோயபல்ஸுக்குக்
கிடைத்துவிட்டது
கோட்டை!

கருத்தியல் பற்றிக்
கடுகளவும் தெரியாது!
அரசியல் அரிச்சுவடி
அணுவளவும் புரியாது!

மொழிப்போர் பற்றி
முனகிடவும் முடியாது!
வரலாறு பற்றிய
வாசனையே கிடையாது!

'கொள்கைத் தலைவர்களின்
கொற்றத்தைப் பற்றிச்
சற்றே உரை'யென்றால்..
சகல உறுப்புகளும்
சமாதி ஆகிவிடும்
அவருக்கு!

எழுதியதைப் படிப்பார்!
எமனைப்போல் கொதிப்பார்!
வெறித்தனமாய்க் குதிப்பார்!
வீரன்போல் நடிப்பார்!

ஆறு மணிக்குமேல்
அந்தரத்தில் பறப்பார்!

கையில் கொடிபிடித்துக்
களமாடவில்லை!
கனல்தெறிக்கும் வெயிலில்
கால்வைக்கவில்லை!

போராட்டம் என்று
புழுதிக்கு வரவில்லை!
பொதுமக்கள் குறைதீர்க்கப்
பொருளள்ளித் தரவில்லை!

உரிமைப் போரில்
ஒருதுளி பங்கில்லை!
ஒருநாளும் பொதுவெளியில்
நடமாடவே இல்லை!

ஆனாலும்.. வேட்டைக்கு
அதிகாரம் கிடைத்தாற்போல்
கோட்டை கிடைத்துவிட்டது
அந்தக்
கோமாளிப் பிறவிக்கு!

பொறிகளைத் திருப்பி
புலன்களைக் கெடுத்து
அறிவினைச் செரித்து
அறியாமை குவித்து
அரியாசனத்தில்
அமர்ந்து விட்டது..
சரியே இல்லாத
ஒரு
தற்குறிக் கூட்டம்!

திரைக்குப் பின்னாலே
திட்டமிட்டு வட்டமிட்டுத்
தீய குடிலர்கள்
தீட்டிய சதித்திட்டம்
அரைகுறைப் பிரசவமாய்
அமைந்துவிட்டது..நம்
அருமைத் தமிழ்நாட்டுக்கு!

நடிப்பு, நயவஞ்சகம்
நக்கல், நையாண்டி
நச்சுப் பார்வை
நாகரிகப் படுகொலை
அனைத்துக்குமான
அருவருக்கத்தக்க வடிவமொன்று
ஆட்சிக் கட்டிலில்
ஏமாளிகளைப் படியாக்கி
ஏறி விட்டது!

அந்தோ..!
அதற்கு
சித்தாந்தம் தெரியுமா?
சிறைவாசம் தெரியுமா?
திராவிடம் தெரியுமா?
தீந்தமிழ் தெரியுமா?
தியாகம்தான் தெரியுமா?

அதற்குத்
தெரிந்ததெல்லாம்
காட்டுத்தனமான கூச்சல்!
கண்ணியமே இல்லாத பாய்ச்சல்!
எல்லைகள் கடந்த மேய்ச்சல்நம்
இயக்கத்தின் மீதான காய்ச்சல்!

இந்தப் போக்கு
ஆரோக்கிய அரசியலின்
ஆயுளைச் சாகடிக்கும்
இரத்தப்போக்கு!

இதனைத்
தடுத்து நிறுத்த வேண்டிய
தார்மிகப் பொறுப்பு
ஒவ்வொரு தமிழனின்
தலைமீதும் இருக்கிறது!

வயப்புலியை
வாலுருவி விட்டு
வேடிக்கை பார்க்கும்
இந்த
வீணர்களை
வீழ்த்தவில்லை என்றால்
வீழ்ந்துவிடும் தமிழகம்!

சரித்திர மனிதர்களை
சகட்டு மேனிக்குப்
புண்படுத்தி மகிழும்
போலிகளின் முகத்திரையைக்
கிழித்தெறிந்தால்தான்
கீழ்வானம் வெளுக்கும்!

இன்பத் தமிழகம்
இதுவரைக்கும் காணாத
துன்பியல் ஆட்சியைத்
துடைப்பத்தால் துடைத்துத்
தூக்கி எறிவோம்!

கண்களை விற்றுக்
கயவர்களைப் பெற்றுக்
கண்ணீர் வடித்துக்
கலங்கும் மக்களைக்
கரங்கொடுத்துக் காப்போம்!

நூறே நாளில்
நொறுங்கிக் கிடக்கும்
மனித மாண்புகளை
மறுபடியும் சேர்ப்போம்!

அரங்கேறி விட்ட
அநியாய தர்பாரை
தரைமட்ட மாக்கித்
தமிழ்நாட்டை மீட்போம்!

**கவிஞர் கங்கைகொண்டான்**
**சேலையூர்**

### நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில்

# பேரறிஞர் அண்ணா 118வது பிறந்தநாள் விழா!

நீலகிரி, செப். 17 -

அறிவுலக ஆசான், பேரறிஞர் அண்ணா அவர்களின் 118வது பிறந்தநாளை முன்னிட்டு நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில், மாவட்ட கழக பொறுப்பாளர் - குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம்.ராஜூ ஆலோசனைப்படி, மாவட்ட கழக அலுவலக முகப்பில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாவட்ட கழக அவை தலைவர் போஜன் தலைமையில் நிர்வாகிகள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

மாவட்ட துணை செயலாளர் ரவிகுமார் வரவேற்றார்.

மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர் தம்பி இஸ்மாயில், உதகை நகர செயலாளர்கள் ஜார்ஜ், ரமேஷ், உதகை தெற்கு (மேற்கு) ஒன்றிய செயலாளர் ஜெகதீசன், பொதுக்குழு உறுப்பினர் வாணீஸ்வரி, மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் முஸ்தபா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னதாக நிர்வாகிகள் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, ஐம்பெரும் முழக்கங்களை முழக்கமிட்டனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் ராஜா, உதகை நகர அவை தலைவர் ஜெயகோபி, துணை செயலாளர்கள் இச்சுபாய், ரீட்டா மேரி, பொருளாளர் அணில்குமார்,

மாவட்ட பிரதிநிதி கார்திக், மாவட்ட துணை அமைப்பாளர்கள் விஜயகுமார், செல்வராஜ், அமலநாதன், சசிகுமார், தியாகு, உதகை நகரமன்ற உறுப்பினர்கள் விஷ்னு, மேரி பினோரீனா, பிரியா வினோதினி, மாவட்ட தொமுச கவுன்சில் செயலாளர் ஜெயராமன், கிளை கழக நிர்வாகிகள் ஸ்டான்லி, ஹென்றி, ரஞ்சித், ராஜ்குமார், பியுலா, சைலாஸ்ரீ, கமல், செல்வராஜ், குருஸ், ஜானி, வேனு உட்பட ஏராளமானவர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி முடிவில் உதகை கிழக்கு நகர செயலாளர் ஜார்ஜ் நன்றி கூறினார்.



திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் இந்தியன் வங்கியில் வாடிக்கையாளர்கள் விரோதப்போக்கை கண்டித்து அக்ரி நடேசன் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பட்டத்தில் தமிழ்நாடு பிரஸ் அண்ட் மீடியா ரிப்போர்ட்டர்ஸ் யூனியன் மாவட்ட செயலாளர் தீபன் சக்கரவர்த்தி மற்றும் ராஜ்குமார், ரமேஷ், பிரகாஷ், ரகுராமன், எய்தன், பாலகுமார், கார்த்தி கேசன் உள்ளிட்டோர் முன்னிலை ஏற்றனர்.